








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## ஜூன்- 2019

*We Are Here..!! To Guide You..!!*









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஜுன்- 25.06.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்



# தேசிய நிகழ்வுகள்

- **கர்நாடக முதலமைச்சர் H. D குமாரசாமி, அண்மையில் 118 வலைத்தளங்களைத் தொடங்கிவைத்தார்.** அவற்றின் மூலம், கட்டட வரைவுப் படங்களுக்கான ஒப்புதல்கள், நில பயன்பாட்டு மாற்றம் மற்றும் பிற தொடர்புடைய அனுமதிகளை பொதுமக்கள் ஆன்லைன் மூலம் பெற முடியும். இதன்மூலம், இடைத்தரகர்கள் மற்றும் தாமதங்களை மக்கள் முற்றாகத் தவிர்க்க இயலும்.

- **இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர்களில் (Other Backward Classes) உட்பிரிவு செய்ய வேண்டும் என்ற சிக்கலை ஆராய்ந்திடுவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் காலத்தை மேலும் 2 மாதங்களுக்கு, அதாவது 31 ஜீலை 2019 வரை, நீட்டிப்பு செய்வதற்கான தனது பின்னேற்பு ஒப்புதலை (ex- post facto approval) மத்திய அமைச்சரவை வழங்கியுள்ளது.**
    - இந்திய குடியரசுத்தலைவரின் ஒப்புதலுடன், 2017 அக்டோபர் 2 அன்று, அரசியலமைப்பு சட்டப்பிரிவு 340 இன் கீழ் அமைக்கப்பட்ட இந்த ஆணையத்தின் காலம், 6வது முறையாக நீட்டிக்கப்பட்டுள்ளது
    - மத்திய பட்டியலில் இதரபிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர்களுக்குள்ளாக உட்பிரிவு செய்ய வேண்டும் என்ற சிக்கல் குறித்த விரிவான அறிக்கையை ஆணையம் தாக்கல் செய்திட உதவும். ஓய்வுபெற்ற நீதிபதி G. ரோகினி தலைமையில் இந்தக் குழு செயல்பட்டு வருகிறது.

- **நிதியியல் நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் (FSDC- Financial Stability and Development Council)** 20- வது சந்திப்பானது மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்களுக்கான அமைச்சரான நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெற்றது.
    - 2010 ஆம் ஆண்டில் FSDC உருவாக்கப்பட்டது
    - நிதியியல் நிலைப்புத் தன்மையைப் பராமரித்து, அவற்றை

வலுப்படுத்துல் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கிடையே அதன் ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல் ஆகியவை இதன் நோக்கங்களாகும்.

.

- **மின்சாரம் மற்றும் புதிய &புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறைக்கான மத்திய இணையமைச்சர் சூரிய/ காற்றாலைத் துறைக்கான பிரச்சனைக்குத் தீர்வு காணும் குழுவினை (Dispute Resolution Committee- DRC)**அமைப்பதற்கான பரிந்துரைக்கு ஒப்புதல் வழங்கியுள்ளார்.
    - இது காற்றாலை/ மின் ஆற்றல் உற்பத்தியாளர்கள் மற்றும் இந்திய சூரிய ஒளி ஆற்றல் கழகம் (Solar Energy Corporation of India- SECI) அல்லது தேசிய அனல் மின் நிறுவனம் ஆகியோர்களுகிடையே ஒப்பந்த உடன்படிக்கைகளுக்கு அப்பால் ஏற்படும் எந்தவொரு எதிர்பாராத பிரச்சனைகளுக்கும் தீர்வு காணும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

- **மக்களின் பரிந்துரைகள் மற்றும் ஈடுபாட்டுடன் மத்தியப் பிரதேச அரசு "தண்ணீரைச் சேமித்தல்" பிரச்சாரத்தை ("Save Water" campaign) நடத்தவுள்ளது**.
    - இந்த நோக்கத்திற்காக மாநில அளவிலான " நீர் செல்" அமைக்கப்பட்டுள்ளது.
    - முதல்வர் கமல்நாத் கூறுகையில், நீர் செல் தண்ணீரை சேமித்து அதன் அளவான பயன்பாட்டை உறுதி செய்வதற்கான ஒரு திட்டம் என்று கூறியுள்ளார்

- **அடுத்த ஐந்து ஆண்டுகளில் 10 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (MSME)**முதலமைச்சரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தை தொடங்க மகாராஷ்டிர மாநில அரசு முடிவு செய்துள்ளது. தொழிற்சாலையின் இந்த முன்னணி திட்டத்தில் பெண் தொழில்முனைவோருக்கு 30% இடஒதுக்கீடு வழங்கப்படும். பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் வரிசையில் இந்தத் திட்டம் செயல்படுத்தபடும்.

## சர்வதேச நிகழ்வுகள்

- **UNICEF அமைப்பின் குழந்தைகள் உரிமைக்கான நல்லெண்ணத் தூதராக இருந்து வரும் இந்திய நடிகை பிரியங்கா சோப்ராவுக்கு,வரும் டிச. 3 அன்று நியூயார்க்கில் நடைபெறவுள்ள விருது வழங்கும் விழாவில், டேனி கே மனிதாபிமான விருது (Danny Kaye Humanitarian Award) வழங்கப்படவுள்ளது**. சமுதாயம் சார்ந்த பங்களிப்பாளராகவும், குழந்தைகளின் கல்விக்காக குரல் கொடுப்பவராகவும் பிரியங்கா அறியப்படுகிறார்.
  - ஐக்கிய நாடுகளின் சர்வதேச Girl Up பரப்புரையின் ஒருபகுதியாக இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.
  - UNICEF ஐன் முதல் நல்லெண்ண தூதராக இருந்த நடிகர் – கொடையாளி டேனி கேயின் பெயரால், இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **எந்தவொரு சர்வதேச விளையாட்டுப் போட்டிகளையும் நடத்துதல் மற்றும் அவற்றிக்கு ஆதரவளித்தல் தொடர்பாக இந்தியாவின் மீது விதிக்கப்பட்ட அனைத்துத் தடைகளையும் சர்வதேச ஒலிம்பிக் குழு (IOC- International Olympic Committee) நீக்கியுள்ளது**.
  - சர்வதேசப் போட்டிகளில் தகுதி பெறும் அனைத்து விளையாட்டு வீரர்களையும் இந்தியாவிற்குள் நுழைய அனுமதிப்பதாக ஒரு எழுதப்பட்ட உறுதிமொழியை இந்திய அரசு IOC- யிடம் வழங்கியது.
  - பாகிஸ்தான் மற்றும் கொசாவா உள்ளிட்ட அனைத்து நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும் இந்தியாவில் நடைபெறவிருக்கும் IOC விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க அனுமதிக்கப்படவிருக்கின்றனர்.